இதற்கிடையில் தன்னோடு பிறந்த தன் இரண்டு சகோதரரும் ஒரு சகோதரியும் கடுமையான விஷகாய்ச்சலால் பாதிக்கப்பட்டு மரித்துப் போனார்கள். அதிர்ச்சியடைந்த யோசேப்பு தன் தாயையும் தைரியப்படுத்தி, 'நாம் மரண இருளின் பள்ளத்தாக்கில் சென்றாலும் பொல்லாப்புக்கு பயப்படக்கூடாது' என்று தனது விசுவாசத்தை அறிக்கையிட்டார். இப்பேர்ப்பட்ட இழப்புகள் மத்தியில், தன்னை நேசித்து, மேய்ப்பனைப்போல் நடத்தி வரும் தேவனை அதிகமாக சார்ந்துக் கொண்டார்.

யோசேப்பு, தான் இழந்த தகப்பனையும் உடன் பிறந்தோரையும் நினைக்கும்போது இயேசுவே எனது மேய்ப்பன் என்று அடிக்கடி அறிக்கை செய்வார். இந்த அறிக்கையும் அனுபவமும், அவர் உள்ளத்தில் ஓர் பாடலாக உருவெடுத்தன.

''சாவைப்போன்ற நிழலான பள்ளத்தில் இறங்கிடினும்

சற்றும் தீங்கு கண்டு அஞ்சிடேனே

வானபரன் என்னோடிருப்பார், (அவரது)

வளைந்த தடியும் கோலுமே என்னை தேற்றும்''

என்று பாடியிருப்பது அவரது அனுபவமன்றோ!

இன்றும் இயேசு நமக்கும் மேய்ப்பனைப்போல இருந்து நம்மை எல்லா தீங்குக்கும் விலக்கி காக்க ஆசையாக இருக்கிறார். ஆகவே, இப்பாடலை பாடும்போதெல்லாம் 'தேவன் எனது பிதா (தகப்பன்)' என்பதை உணர்வோம். யோசேப்பு மரித்து இன்றும் பேசும் சாட்சியாயிருக்கிறார்.

**Rev. S.C. Barnabas**
Immauel Illam.
No:30, Srinivasa Nagar,
Nallampalayam, Coimbatore.